தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.
ந.க.எண்.20268 / ஜே2/2015 நாள்:14.08.2015.

------

பொருள்– .. தொடக்கக் கல்வி – தந்தை பெரியாரின் 137 வது பிறந்தநாள் விழா – 6 முதல் 8 ஆம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கு "**பெரியார் ஆயிரம்**" என்ற தலைப்பின் கீழ் வினா – விடை எழுத்து தேர்வு நடத்துதல் – சார்பாக.

பார்வை– தஞ்சாவூர் மாவட்டம், பெரியார் மணியம்மை பல்கலைகழக பெரியார் சிந்தனை மைய இயக்குநரின் கடிதம் நாள் 28.07.2015

------

பார்வையில் காணும் கடிதம் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலருக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

அக் கடிதத்தில் 17.09.2015 அன்று தந்தை பெரியாரின் 137 வது பிறந்தநாளை முன்னிட்டு தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை பள்ளி மாணவர்கள் அறிந்தும் கொள்ளும் பொருட்டும், மாணவர்களின் சிந்தனை மற்றும் தனித்திறனை மேம்படுத்தும் வகையில் பெரியார் மணியம்மை பல்கலைக் கழகத்தின் சார்பில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கிடையே "**பெரியார் ஆயிரம்**" என்ற தலைப்பில் வினா– விடை எழுத்து தேர்வு நடைபெறவுள்ளதாகவும், அப் போட்டியில் கலந்துக் கொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் 15.08.2015 க்குள் பதிவு செய்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட போட்டியில் விருப்பமுள்ள மாணவர்கள் கலந்து கொள்ள ஏதுவாக உதவி / கூடுதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் மூலமாக பள்ளி தலைமையாசிரியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்புமாறு அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – பார்வையில் காணும் கடிதம்

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்.

தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6.
ந.க.எண் 3612/அ1/2014, நாள் 14.08.2015.

---

பொருள் : தந்தை பெரியாரின் 137 ஆம் பிறந்த நாள் விழா – பெரியார் ஆயிரம் வினா – விடைப்போட்டி எழுத்துத் தேர்வு 6–12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கேற்பு – பள்ளிகளுக்கு உரிய ஆணை வழங்கக் கோரியது – சார்பு.

பார்வை : தஞ்சாவூர் பெரியார் சிந்தனை மைய இயக்குநரின் கடிதம் நாள் 28.07.2014.

----

பார்வையில் கண்ட கடிதத்தின்படி செப்டம்பர் 17ஆம் தேதி தந்தை பெரியாரின் 137 ஆம் பிறந்த நாளை முன்னிட்டு, தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றை பள்ளி மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும், மாணவர்களின் அறிவியல், சமூகவியல் சிந்தனைகளை வளர்க்கும் வகையிலும் திட்டமிட்டு, பெரியார் மணியம்மை பல்கலைக் கழகத்தின் பெரியார் சிந்தனை மையத்தின் சார்பில் 6–8 ஆம் வகுப்பு வரையிலும் பயிலும் பள்ளி மாணவர்களிடையே ‘பெரியார் ஆயிரம்’ வினா விடை எழுத்துத் தேர்வும், 9–12ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களிடையே “சிந்தனை சோலைப் பெரியார்” வினா விடை எழுத்துத் தேர்வும் தமிழகம் முழுவதும் நடத்திடவும், இப்போட்டியில் கலந்துக் கொள்ள விரும்பும் மாணவர்கள் 15.08.2015ஆம் தேதிக்குள் பதிவு செய்திடவும் அக்டோபர் மாதத்தில் விடுமுறை நாட்களில் (சனி, ஞாயிறு) நடைபெறும் போட்டியில் முதல் மதிப்பெண் பெறும் மாணவச் செல்வங்களுக்கு சிறப்பு பரிசுகளும் நற்சான்றிதழ்களும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி தகவலின் அனைத்து மெட்ரிகுலேஷன் பள்ளிகள் முதல்வர்களுக்கும் தெரிவிக்க அனைத்து மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர்

பெறுநர்
அனைத்து மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர்கள்.

நகல்
இயக்குநர்,
பெரியார் சிந்தனை மையம்,
பெரியார் நகர், வல்லம், தஞ்சாவூர் – 613 403.

D:\ALL SHEETS\A1\common letters.docx

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6

ந.க.எண்.056448/எம்/இ1/2015, நாள்.06.08.2015

பொருள்: தந்தை பெரியாரின் 137 ஆம் பிறந்த நாள் விழா – பெரியார் ஆயிரம் வினா–விடைப் போட்டி எழுத்துத் தேர்வு – 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கேற்பு – பள்ளிகளுக்கு உரிய ஆணை வழங்கக் கோரியது – அனுமதி அளித்தல் – சார்பு.

பார்வை : தஞ்சாவூர் பெரியார் சிந்தனை மையம் கடிதம், நாள்.28.07.2015.

-----

பார்வையில் கண்ட கடிதத்தின்படி செப்டம்பர் 17 ஆம் தேதி தந்தைபெரியாரின் 137 ஆம் பிறந்த நாளை முன்னிட்டு தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றை பள்ளி மாணவர்கள் அறிந்துகொள்ளும் வகையிலும், மாணவர்களின் அறிவியல் சமூகவியல் சிந்தனைகளை வளர்க்கும் வகையிலும் திட்டமிடப்பட்டு பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின் பெரியார் சிந்தனை மையத்தின் சார்பில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலும் பயிலும் பள்ளி மாணவர்களுக்கிடையே "பெரியார் ஆயிரம்" வினா–விடை எழுத்துத் தேர்வும், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கிடையே "சிந்தனைச் சோலை பெரியார்" வினா–விடை எழுத்துத் தேர்வும் தமிழகம் முழுவதும் நடத்திடவும், இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் 15.08.2015 ஆம் தேதிக்குள் பதிவு செய்திட வேண்டும் எனவும், அக்டோபர் மாதத்தில் விடுமுறை நாட்களில் (சனி, ஞாயிறு) நடைபெறும் இப்போட்டியில் முதல் மதிப்பெண் பெறும் மாணவச்செல்வங்களுக்கு சிறப்பு பரிசுகளும், நற்சான்றிதழ்களும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இப்போட்டித் தேர்வில் அனைத்து பள்ளி மாணவர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றிடும் வகையில் அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தலாகிறது.

பள்ளிக்கல்வி இயக்குநருக்காக,

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல் – திரு.பழனிஅரங்கசாமி, இயக்குநர் பெரியார் சிந்தனை மையம், தஞ்சாவூர்.